**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 20.09.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 17.09.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பிரதி வாரம் செவ்வாய் கிழமைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2021–22–இல் ஒப்படைக்கும் நாள் முதல் 2023–2024 வரையிலான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 16.09.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பிரதி வாரம் செவ்வாய் கிழமை சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1) | திரு ல. கிருஷ்ணன், த/பெ. லட்சுமண உடையார்,<br>6, பழனி தெரு, இராசிபுரம். | ரூ. 7,75,000/– |
| 2) | திரு கே. சங்கர், த/பெ. கிருஷ்ணன்,<br>46/5, காட்டூர் காட்டுக்கொட்டாய், இராசிபுரம். | ரூ. 7,05,000/– |

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண். 2–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகையைவிட ரூ. 7,05,000/–விட வ.எண். 1–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 7,75,000/– அதிகமாக உள்ளது. இது சென்றாண்டு தொகையைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைவிட குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பிரதி வாரம் செவ்வாய் கிழமை வாரசந்தை சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 7,75,000/–ஐ திரு ல. கிருஷ்ணன், த/பெ. லட்சுமண உடையார் என்பவர் கோரியுள்ளார். இது சென்றாண்டு மதிப்பு ரூ. 8,32,387/– மற்றும் மூன்றாண்டு சராசரி ரூ. 7,93,379/–விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேலும், இப்பணிக்கு துறை ரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்ள வாரந்தோறும் அலுவலகப் பணியாளர்களான வருவாய் உதவியாளர் ஒருவர், மற்றும் இரண்டு ஒப்பந்தப் பணியாளர்கள் மொத்தம் 3 பணியாளர்கள் நியமனம் செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களுக்கு 52 நாட்களுக்கு ஊதியம் ரூ. 75000/– வீதம் ஊதியம் சராசரியாக வழங்கப்பட்டு வருகின்றது. 16.09.2021–இல் நடைபெற்ற வாரச்சந்தை சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ. 7,75,000/– வரப்பெற்றுள்ளது. கடந்த 2020 ஏப்ரல் மாதம் முதல் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சந்தைக்கு வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாலும், பல வாரங்களாக வார சந்தை நடைபெற அரசு தடை செய்ததாலும் பொதுமக்கள் வருகையும் குறைந்துள்ளது.

எனவே, துறை ரீதியான வசூல் செய்ய ஆகும் செலவினம் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணத்தினாலும் மீண்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதற்கு அதிகமான தொகைக்கு செல்லும் வாய்ப்பு குறைவாக இருப்பதால் வ.எண். 1 திரு ல. கிருஷ்ணன், த/பெ. லட்சுமண உடையார் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1091**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான நகர எல்லைக்குள் கோழிக்கடை மற்றும் மீன் கடை சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2021–2022–இல் ஒப்படைக்கும் நாள் முதல் 2023–2024 வரையிலான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 16.09.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1) | திரு பி. சுப்பரமணி, த/பெ. பச்சமுத்து, 54எ, காட்டூர், இராசிபுரம். | ரூ. 1,35,000/– |
| 2) | திரு கே. சங்கர், த/பெ. கிருஷ்ணன், 46/5, காட்டூர் காட்டுக்கொட்டாய், இராசிபுரம். | ரூ. 1,25,000/– |

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண். 2–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 1,25,000/–விட வ.எண். 1–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 1,35,000/– அதிகமாக உள்ளது. இது சென்றாண்டு தொகையைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைவிட அதிகமாகவும் உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகர எல்லைக்குள் கோழிக்கடை மற்றும் மீன் கடை சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 1,35,000/– திரு பி. சுப்பரமணி, த/பெ. பச்சமுத்து என்பவர் கோரியுள்ளார். இது சென்றாண்டு தொகையைவிட குறைவாகவும் மற்றும் மூன்றாண்டு சராசரியைவிட அதிகமாகவும் உள்ளது. மேலும், 26.02.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் போட்டிப்போட்டு அதிகமாக ரூ. 5,45,500/–க்கு ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டது. மேற்படி குத்தகையினம் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக கோழி, மீன் கடைகள் நடக்காததால் 03.05.2021 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், இக்குத்தகையினத்திற்கு துறை ரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்ள வாரந்தோறும் அலுவலகப் பணியாளர்களான வருவாய் உதவியாளர் ஒருவர், மற்றும் இரண்டு ஒப்பந்தப் பணியாளர்கள் மொத்தம் 3 பணியாளர்கள் நியமனம் செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு ஊதியம் ரூ. 96000/– வீதம் ஊதியம் சராசரியாக வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே, துறை ரீதியான வசூல் செய்ய ஆகும் செலவினம் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணத்தினாலும் மீண்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதற்கு அதிகமான தொகைக்கு செல்லும் வாய்ப்பு குறைவாக இருப்பதால் திரு பி. சுப்பரமணி, த/பெ. பச்சமுத்து என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1092**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(3) இந்நகராட்சிக்குச் சொந்தமான பழம், பல்பொருள் விற்பனை செய்வோரிடம் சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கு 16.09.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1) | திரு எஸ். பழனிசாமி, த/பெ. பி. சுப்பரமணி,<br>7/3, வி. நகர் ரோடு, இராசிபுரம். | ரூ. 4,75,000/– |

வ. எண். 1–இல் கண்டுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. இது சென்றாண்டு ஒப்பந்தப்புள்ளித் தொகையைவிடவும், மூன்றாண்டு சராசரியைவிடவும் குறைவாக உள்ளது. எனவே, மேற்படி இனத்தை மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளிக் கோரலாம்.

**அலுவலகக் குறிப்பு :** பழம், பல்பொருள் விற்பனை செய்வோரிடம் சுங்கம் வசூல் செய்யும் இனத்திற்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதாலும், இது சென்றாண்டைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரிக்கு குறைவாகவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதால் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1093**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகனம் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2021–22–இல் ஒப்படைக்கும் நாள் முதல் 2023–2024 வரையிலான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 16.09.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகனம் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதின் அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1) | திரு எ. மணிகோபால், த/பெ. அர்த்தனாரி,<br>2/55, நடுப்பட்டி, இராசிபுரம். | ரூ. 7,50,000/– |
| 2) | திரு ஆர். விநாயகமூர்த்தி, த/பெ. இராமலிங்கம்,<br>5, வெங்கிடுசாமி தெரு, இராசிபுரம். | ரூ. 8,00,000/– |

புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகனம் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு ஆர். விநாயகமூர்த்தி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண். 1–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட ரூ. 7,50,000/–விட வரிசை எண். 2–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 8,00,000/– அதிகமாக உள்ளது. இது சென்றாண்டு தொகையினைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைவிட குறைவாகவும் உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு நகராட்சியால் 23.20 மீ. x 6.20 மீ. = 143.84 ச.மீ. கொண்ட ஓட்டுக் கொட்டகை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6260 ச.மீ. மட்டுமே காலியிடமாக வாடகைக்கு விடப்பட்டுள்ளது. காலியிடத்திற்கு ஒப்பந்ததாரர்களால் மட்டுமே GI. Sheet (தீ பிடிக்காத கூரை) அமைக்கப்பட்டு இரு சக்கர வாகனம் பணி மேற்கொள்ளப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. காலியிடம் வழங்கப்பட்ட நிலையில் கொட்டகை அமைத்து இரு சக்கர வாகனம் நடைபெற்று வருகின்றது. மேற்படி இரு சக்கர வாகனம் கொட்டகை அமைக்கப்பட்ட பணியானது ஒப்பந்ததாரரால் அமைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரின் குத்தகை உரிமக் காலம் 31.03.2021–இல் முடிவடைந்த நிலையிலுள்ளது. ஒப்பந்த உரிமக் காலம் முடிவடைந்தவுடன் ஒப்பந்ததாரர் இரு சக்கர வாகன கொட்டகையினை தானே முன்வந்து கழற்றிக் கொள்ளுமாறு அலுவலகத்தில் கடிதம் வழங்கியுள்ளார்.

இரு சக்கர வாகனத்தின் மேற்கூரையினை ஒப்பந்ததாரர் அகற்றிவிட்டால், இரு சக்கர வாகனம் நிறுத்த வசதியில்லாமல் நிதியிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் மறு ஒப்பந்ததாரர் வரும் வரை மேற்கூரையினை அகற்ற வேண்டாமென ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், துறை ரீதியான வசூல் பணிக்கு மூன்று அலுவலகப் பணியாளர்கள் மற்றும் ஐந்து ஒப்பந்தப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்களுக்கு சராசரியாக வருட செலவினம் ரூ. 3,24,000/– வழங்கப்படவுள்ளது. மேலும் மேற்கூரை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 15,00,000/– ஆகும் என நகராட்சி பொறியாளர் தெரிவித்துள்ளனர். கடந்த 2020 ஏப்ரல் மாதம் முதல் கொரேனா வைரஸ் தாக்கம் காரணமாக பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டபடியால் இரு சக்கர வாகன வரத்தும் பேருந்து நிலையத்தில் குறைந்துள்ளது.

எனவே, துறை ரீதியாக வசூல் செய்ய ஆகும் பணியாளர்களின் செலவு, மேற்கூரை அமைக்கும் செலவு மற்றும் இரு சக்கர வாகனம் கொட்டகை தீ பிடிக்காத இரும்பு தகடு கொண்ட மேற்கூரை அமைக்கும் செலவு, கொரோனா வைரஸ் தாக்கம் காரணத்தினால் பேருந்து வரத்து குறைந்துள்ளதால் இரு சக்கர வாகனம் நிறுத்தம் குறைந்துள்ளது. மேற்கண்ட காரணங்களினால் மீண்டும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதற்கு அதிகமாக செல்லும் வாய்ப்பு குறைவாக இருப்பதால் வரிசை எண். 2–இல் திரு ஆர். விநாயகமூர்த்தி, த/பெ. இராமலிங்கம் அவர்கள் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1094**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

( 5 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டி சுங்கம் வசூலிக்கும் உரிமம் 2021–2022–ஆம் ஆண்டிற்கான ஒப்படைக்கும் நாள் முதல் 2023–2024 முடிய உள்ள காலத்திற்கு 16.09.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1) | திரு பி. சுப்பரமணி, த/பெ. பச்சமுத்து, 54எ, காட்டூர், இராசிபுரம். | ரூ. 2,20,000/– |

| | | |
|---|---|---|
| 2) | திரு கே. சங்கர், த/பெ. கிருஷ்ணன்,<br>46/5, காட்டூர் காட்டுக்கொட்டாய், இராசிபுரம். | ரூ. 2,00,000/– |

மேற்கண்டுள்ள வரிசை எண். 2–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 2,00,000/–ஐவிட வ.எண். 1–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 2,20,000/– அதிகமாக உள்ளது. இது சென்றாண்டு தொகையைவிட குறைவாகவும் மூன்றாண்டு சராசரியைவிட அதிகமாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகராட்சிக்குட்பட்ட ஆடு அடிக்கும் தொட்டி குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.2,20,000/– திரு பி. சுப்பரமணி, த/பெ. பச்சமுத்து என்பவர் கோரியுள்ளார். இது சென்றாண்டு தொகையைவிட குறைவாகவும் மூன்றாண்டு சராசரியைவிட அதிகமாகவும் உள்ளது. மேலும், 26.02.2021 அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் போட்டிப்போட்டு அதிகமாக ரூ. 5,51,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டது. மேற்படி குத்தகையினம் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக ஆடு அடிக்கும் தொட்டி நடத்த இயலாத காரணத்தினால் 02.08.2021 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், மேற்படி இனத்திற்கு துறை ரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்ள வாரந்தோறும் அலுவலகப் பணியாளர்களான இரண்டு துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஒரு சங்கிலியாளர், இரண்டு ஒப்பந்தப் பணியாளர்கள் மொத்தம் 5 பணியாளர்கள் நியமனம் செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு ஊதியம் ரூ. 96000/– வீதம் ஊதியம் சராசரியாக வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, துறை ரீதியான வசூல் செய்ய ஆகும் செலவினம் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணத்தினாலும் மீண்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதற்கு அதிகமான தொகைக்கு செல்லும் வாய்ப்பு குறைவாக இருப்பதால் வ.எண். 1 திரு பி. சுப்பரமணி, த/பெ. பச்சமுத்து என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1095**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் தெருவிளக்குகள் இல்லாத பகுதிகளில் புதிய LED தெரு விளக்குகள் ஏற்கனவே உள்ள கம்பங்களில் LED தெரு விளக்குகள் 210, புதிய கம்பங்கள் அமைத்து LED தெரு விளக்குகள் 161 மற்றும் புதிய கம்பங்கள் மற்றும் மின் கம்பிகள் அமைத்து LED தெரு விளக்குகள் 352 (மொத்தம் 723 LED தெரு விளக்குகள்) அமைத்தல் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடான ரூ. 141.00 லட்சத்தை இந்நகராட்சிக்கு முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** ரூ. 141.00 இலட்சம் மதிப்பீட்டிலான மொத்தம் 723 LED தெரு விளக்குகள் அமைக்க மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(2690/2021/இ1)

**தீர்மானம் எண். 1096**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி